உ

ஓம் நமசிவாய

# பிரதோஷ விரதம்



**"ஞானரத்தினம்"**


**சிவன்கோவில்**

**சித்தன்கேணி**

**(கார்த்திகை மாத மஹா பிரதோஷத் திருநாள் - 2006)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# <u>பிரதட்சண விளக்கப் படம்</u>






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பிரதோஷ விரதம்

திருச்சிற்றம்பலம்

எல்லாம் வல்ல அருள்மிகு சிவாமி உடனுறை சிவசிதம்பரேஸ்வரப் பெருமானின் பிரதோஷகால திவ்ய தரிசனம் வேண்டி அவன் சன்னிதானத்தில் சிவபஞ்சாட்சர மந்திரத்துடன் கூடியிருக்கும் அடியவர் கூட்டம் மிகம்பெரியது. அச்சிவ சீலர்களின் பிரதோஷகால விரதம் மென்மேலும் சிறப்புறும் வண்ணம் இச்சிறிய மலர் ஞானரத்தினம் வெளியீடாக மலர்கின்றது. இவ்வான்மீக மலர் வெளிவர துணை நின்ற சுழிபுரம் திரு,திருமதி கதிர்காமநாதன் குடும்பத்தினர்களுக்கு ஆடவல்லான் துணை என்றென்றும் கிடைக்க பிரார்த்தித்து ஆசிகள் கூறுகின்றோம். அன்பர்கள் இம்மலரினை இன்றைய மஹாப்பிரதோஷ நன்னாளில் பெற்று விரத தார்பரியங்களை அறிந்து கடைப்பிடித்துச் சீரிய இறைநெறியில் இலங்க வேண்டிச் சமர்ப்பிக்கின்றோம்.

"நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க"

**வெளியீட்டாளர்கள்**

"ஞானரத்தினம்" **சிவஸ்ரீ. சபா. வாஸுதேவக்குருக்கள்**
சிவன்கோவில் **பிரம்மஸ்ரீ. சபா. உமாபதிசர்மா.**
சித்தன்கேணி
18.11.2006.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பிரதோஷ விரதம்

சிவசிவ என்கிலர் தீவினையாளர்

சிவசிவ என்றிடத் தீவினை மாளும்

சிவசிவ என்றிடத் தேவரும் ஆவார்

சிவசிவ எனச் சிவகதி தானே. —திருமந்திரம்

எமது மனம் கணத்திற்கு கணம் மாறும் இயல்புடையதாகும். ஒரு சமயம் நல்லதை சிந்தித்து நல்லதைச் செய்கின்றது மறுகணம் தீயதைச் சிந்தித்து தீயதைச் செய்கின்றது. நல்லதை தேவகுணம் என்கின்றோம் தீயதை அசுர குணம் என்கின்றோம். இரு குணங்களுக்கிடையிலான போராட்டமே பாற்கடல் கடைந்த நிகழ்வாகும். எமது மனதில் அசுர குணம் வலுக்குண்றி தேவகுணம் மேலோங்க மேலோங்க எமது வாழ்விலும் அமைதியும் மகிழ்சியும் சுபீட்சமும் கிடைக்கின்றது. நல்லன சிந்திக்கவும் நல்லன ஆற்றவும் அதன் மூலம் நல்வாழ்வு பெறவும் நமக்கு அருள்புரிபவர் சிவன் ஆவார். ஏனெனில் சிவம் என்ற சொல்லுக்கே மங்களம், சுபம் எனப் பொருள்படும். எனவே சிவன் கழல் தொழுவதே சாலச்சிறந்ததாகும்.

இறைவனை எப்பொழுதும் எண்ணி வழிபட வேண்டும். ஆனால் புண்ணிய தினங்களில் வழிபடும் போதும் நமக்கு பல்கோடி மடங்கு மிகுதியன பயன் கிடைக்கின்றது. அந்தவகையில் சிவனின் பிரதோஷ விரதம் சிறப்பிற்குரிய புண்ணிய நாளாகும். இப்புண்ணிய தினத்தில் சிவனை எண்ணுவதாலும் துதிப்பதாலும் எம் மனதில் உள்ள தீயவைகள் நீங்கப் பெற்று நல்லவைகள் பெருகி வாழ்வு சிறப்படைகின்றது. பாற்கடல் கடைந்து பல்வகைச் செல்வங்களை பெற்றுக் கொண்டது போன்று எம்மைப் பற்றிய பாவங்கள் விலகி, கடன் வறுமை நோய், பயம் கிலேசம் துர்மரணம், துயரம் இவையாவும் நீங்கப்பெற்று வாழ்வு சிறக்கின்றது இச்சிவ விரதத்தினால்.

பிரதோஷவிரதம் பாற்கடல் கடைந்த நிகழ்வின் மூலமாக நமக்குக்கிடைத்த உயர்ந்த சிவ விரதமாகும். தெய்வங்களில் சிறந்த தெய்வம் சிவனாவார். அதே போன்று விரதங்களில் சிறந்த விரதம் பிரதோஷ விரதமாகும். சைவப் பெருமக்களுக்கு இன்றியமையாத சிறந்த சிவவிரதம் பிரதோஷவிரதமாகும். பிரதோஷம் என்பது தோஷங்களை நிவர்த்திப்பது என்றும் பிறருடைய தோஷத்தை நிவர்த்திப்பது எனறும் பொருள் கொள்ளப்படும். இப்பிரதோஷமானது ஐவகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நித்தியப் பிரதோஷம்
- பட்சப் பிரதோஷம்
- மாதப் பிரதோஷம்
- மஹாப் பிரதோஷம்
- பிரளயப் பிரதோஷம்.

**நித்தியப் பிரதோஷம் :** ஒவ்வொரு நாளும் மாலை 4.30 மணியில் இருந்து 6.30 மணிக்குள் இடைப்பட்ட நேரமாகும். இவ்வேளையில் பஞ்சாட்சரசெபம் செய்வதால் மேன்மையுண்டாகும் என கூறப்படுகின்றது.

**பட்சப்பிரதோஷம் :**ஒவ்வொரு மாதத்திலும் வரும் (13வதுதிதி) திரியோதசித் திதியில் அனுஷ்டிப்பதாகும்.

**மாதப் பிரதோஷம் :** ஒவ்வொரு மாதத்திலும் வரும் தேய்பிறை திரியோதசித் திதியில் வருவதாகும்.

**மஹாப் பிரதோஷம் :** தேய்பிறையில் சனிக்கிழமையன்று திரியோதசித்திதி வருமாயின் அது மஹாப்பிரதோஷம் ஆகும். அதுவும் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் இச்சனிப்பிரதோஷம் வருமாயின் மிகச்சிறப்பாகும்.

**பிரளயப் பிரதோஷம் :** பிரளய காலத்தில் எல்லாம் சிவனிடம் ஒடுங்கும். அதுவே பிரளய பிரதோஷமாகும்.

நரை, திரை, மூப்பு, மரணம் ஆகியவற்றை வெல்ல வல்ல அமிர்தம் வேண்டி திருப்பாற்கடலை கடைந்த போது அங்கு தோன்றிய ஆலகால விஷத்தினின்று தேவர்களைக் காக்கும் பொருட்டு சிவபெருமான் அவ்விஷத்தினை தாம் உண்டருளினார். தசமியன்று பாற்கடலை கடைந்தார்கள். ஏகாதசியன்று விமலன் விஷத்தினை உண்டருளினார், துவாதிதியில் இறைவன் அயர்ந்திருந்தார், திரியோதசியன்று தேவர்களின் வேண்டுதலுக்கிணங்க நந்திதேவரின் இரு கொம்புகளுக்கிடையில் காட்சி கிடைக்குமாறு ஆனந்தமாக அதிசயமான திருநடனமாகிய சந்தியா தாண்டவத்தினை ஆடி அனைவரையும் பக்திப் பரவசத்தில் திகழவைத்தார். இவ்நிகழ்வு நடைபெற்ற தினம் திரியோதசித்திதி சனிக்கிழமையில் கூடியபோது அகும். அன்று முதல் திரியோதசி திதியன்று மாலை நேரம் பிரதோஷ விரதம் அனுஷ்டிக்கபடலா்யிற்று.

## பிரதோஷ விரதம் அனுஷ்டிக்கும் முறை

அதிகாலையில் நீராடி தூய ஆடையை உடுத்துக் கொண்டு நித்திய கடமைகளை முடித்த பின்னர் தங்கள் தங்கள் இல்லங்களில் இயன்ற சிவ வழிபாடுகளைச் செய்து கொண்டு, மாலை பிரதோஷ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாகிய மாலை 4.30 மணி முதல் 7.00 மணி வரையிலான காலத்தில் சிவாலயத்திற்கு சென்று சிவ தரிசனம் காணல் வேண்டும்.

நந்திதேவருக்கு அபிஷேகம் செய்யும் போது எண்ணெய், பால், தயிர், சந்தனம், இளநீர், பன்னீர் போன்ற அபிஷேகத் திரவியங்களால் தங்கள் வசதிக்கமைய செய்வித்தும் பின்பு அருகம்புல்சாற்றி வில்வத்தினால் அர்ச்சனையும் ஆற்றி நெய்த்தீபமும் ஏற்றி துதித்தல் வேண்டும். இவ்வாறு சிவன் பார்வதிக்கும் செய்து துதிசெய்தல் வேண்டும். விசேஷமாக சிவன், நந்திதேவருக்கு காப்பரிசியும் அன்ன நிவேதனமும் நிவேதித்தல் வேண்டும்.

சிறப்பாக பிரதோஷ தினத்தன்று உபவாசம் இருந்து வழிபாடு ஆற்றுதல் வேண்டும். சிவ தரிசனம் கண்ட பிற்பாடு பால் பழம் அருந்தி விரதத்தினை இருத்தல் சிறப்பினைத் தரும். சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களுள் வரும்சனிப்பிரதோஷ அதாவது சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷத்தில் ஆரம்பித்தலும் நிறைவு செய்தலும் வேண்டும். ஒரு வருடகாலம் விரதத்தினைக் கைக்கொண்ட பின்பு விரதோத்பாவனம் செய்தல் வேண்டும். விரும்பினால் தொடர்ந்து அனுஷ்டிக்கலாம் ஆனால் வருடா வருடம் விரத பூர்த்தி செய்து கொள்ளல் வேண்டும்.

## சோம சூத்தப் பிரதட்சணம்

பிரதட்சணமானது ஆன்மாவை இறைவனோடு ஒன்றிணையச் செய்வதாகும். பிரதோஷ காலத்தில் சிவாலயத்தில் சிவபிரானை வழிபடும் முறையை சோமசூத்தப் பிரதட்சணம் என்று அழைப்பார்கள். அதாவது முதலில் சிவபெருமானையும் ரிஷப தேவரையும் வணங்கி விட்டு அப்பிரதட்சணமாக அதாவது இடது புறமாக சண்டேஸ்வரர் சந்நிதி வரை சென்று அவரை வணங்கிக் கொண்டு அப்படியே திரும்பி வந்து முன்போல சிவலிங்கத்தினை வணங்கி பின்பு வலமாக ஆலயத்தை வலம் வந்து சிவனின் கருவறையின் தீர்த்தம் வரும் கோமுகை வரையில் வந்து அதனை கடக்காமல் திரும்பவும் இடப்புறமாக வந்து சிவனையும் நந்தி தேவரையும் வழிபடல் வேண்டும். இவ்வாறு மூன்று முறை பிரதட்சணம் செய்து கொள்ளல் வேண்டும். இப்பிரதட்சணத்தினால் அசுவமேத யாகம் செய்த பலனை பெற்றுக் கொள்ளலாம்.

## நந்தி தேவர் வழிபாடு

பார்வதிசமேதராய் கைலாயத்தில் பரமசிவன் வீற்றிருந்த சமயம் அங்கு நாரதர் வந்தார். பெருமானே பூலோகத்தில் மக்கள் அறியாமையால் துன்புறுகின்றனர், தங்கள் திருநாமத்தைக் கூட ஓத மறந்துவிட்டனர் எனவே தாங்கள் தான் மக்கள் துயரைத்தீர்க்க வேண்டும் என இரங்கினார். உடனே நாரதர் கோரிக்கையை ஏற்ற சிவபெருமான் பூலோகம் சென்று குறை தீர்ப்பேன் அதுவரையில் எனது இடத்தில் நந்திதேவன் அமர்ந்திருப்பான் என்றார். நந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவருக்கு அத்தகய பெருமை உள்ளதா என வினாவிய நாரதருக்கு சிவன் கூறலானார்.

நந்திதேவன் பக்தியில் என்னைப் போன்றவன், ஆதியில் அவதரித்தவன். நானே நந்தி தேவன். தர்மமே வடிவானவன், சிவாய நம என்னும் மந்திரத்தின் வடிவாக இருப்பவன், எப்போதும் என்னைச் சுமந்து கொண்டிருப்பவன் எனக்கு ஈடாக திகழ்பவன் பாற்கடல் கடைந்தபோது தேவர்களின் உயிர்காக்க நன்கு துணைநின்றவரும் நந்தி தேவரே ஆவார். எனவே நந்திதேவரை வழிபாடு செய்பவர்க்கு சிறந்த பக்தியும், நல்ல குழந்தைச் செல்வங்களும், சகல காரிய சித்தியும், உயர்ந்த பாதவிகளும், நல்லெண்ணங்கள், நல்லொழுக் கங்கள் கிடைக்கும். இவற்றிக்கு மேலாக முக்தியென்னும் வீடு பேற்றையும் அடைவர் என சிவன் விளக்கினார். அதனால் பிரதோஷகாலத்தில் முதல் வழிபாடு அவருக்கு செய்யப்படுகின்றது.

## பிரதோஷ விரதம் இருப்பதனால் கிடைக்கும் பலன்

துன்பம் நீங்கி -- இன்பம் பெறுவார்.
மலடு நீங்கி – மகப்பேறு பெறுவார்.
கடன் நீங்கி – தனம் பெறுவார்.
வறுமை ஒழிந்து – செல்வம் பெறுவார்.
நோய் நீங்கி – நலம் பெறுவார்.
அறியாமை நீங்கி – ஞானம்பெறுவார்.
பாவம் தொலைந்து – புண்ணியம் எய்துவார்.
பிறவி ஒழிந்து – முத்தி அடைவார்.

பிரதோஷ விரதத்தினால் ஒரு வருடம் தினம் தோறும் ஆலயம் சென்ற பலன் கிடைக்கும். சனிப்பிர தோஷ விரதத்தினால் பன்னிரண்டு வருடங்கள் ஆலய வழிபாடு செய்த பலனைத்தரும். அத்தோடு பஞ்சமா பாதகம் செய்த பாவமும் தீரும். இந்நாளில் சிவனுக்கு வில்வார்ச்சனை செய்தால் ஒரு கோடி மலர்களல் அர்ச்சித்த புண்ணியம் உண்டாகும்.

## கிழமைகளும் பிரதோஷ வழிபாட்டுப்பலனும்

ஞாயிற்றுக்கிழமைகளில் வரும் பிரதோஷ வழிபாட்டின் பலன் - சுப மங்களம் கிடைக்கின்றது, நவக்கிரக தோஷம் நீங்குகின்றது.

திங்கட்கிழமையில் வரும் பிரதோஷ வழிபாட்டின் பலன் -- நல்லெண்ணங்களை உருவாக்கும், நல்லருள் கிடைக்கின்றது, தீராத வினை தீருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வாய் கிழமைகளில் வரும் பிரதோஷ வழிபாட்டின் பலன் - பஞ்சம் பட்டினி அகலும், செய்வினை சூனியங்கள் அகலுகின்றது, நல்வாழ்வு கிடைக்கின்றது.

புதன் கிழமைகளில் வரும் பிரதோஷ வழிபாட்டின் பலன் - ஆண் சந்தான பாக்கியம் கிடைக்கின்றது, பாவம் அகலுகின்றது.

வியாழக் கிழமைகளில் வரும் பிரதோஷ வழிபாட்டின் பலன் - விரும்பி அரிய பலன்கள் கிடைக்கின்றது.

வெள்ளிக்கிழமைகளில் வரும் பிரதோஷ வழிபாட்டின் பலன் - எதிர்ப்புகள் நீங்குகின்றது, மன வேதனை அகலுகின்றது, மாங்கல்ய பாக்கியம் கிடைக்கின்றது.

சனிக் கிழமைகளில் வரும் பிரதோஷ வழிபாட்டின் பலன் - சகல சௌபாக்கியங்களும் கிடைக்கின்றது.

## மாதங்களும் பிரதோஷ கால நிவேதனங்களும் அதன் பலன்களும்.

சித்திரை :- நீர் மோரும் தயிர்சாதமும் நிவேதித்து சிறுபிள்ளைகளுக்கு கொடுத்தல் வேண்டும். இவ்வாறு செய்தால் மூலம், சூடு, எலும்புருக்கி போன்ற நோய்கள் தீரும்.

வைகாசி :- பாலும் சர்க்கரைப்பொங்கலும் நிவேதித்து தானம் செய்தல் வேண்டும். இதனால் எல்லாவித வயிற்றுக் கோளாறுகளும் நீங்கும்.

ஆனி :- தேனும் தினைமாவும் நிவேதித்து தானம் செய்தல் வேண்டும். இதனால் மலட்டுத்தன்மை நீங்கும்

ஆடி :- வெண்ணையுடன் கூடிய சர்க்கரை நிவேதித்து தானம் செய்தல் வேண்டும். இதனால் கொழுப்பினால் வரும் நோய்கள் தீரும்

ஆவணி :- தயிர்ச்சாதம் நிவேதித்து தானம் செய்தல் வேண்டும். இதனால் காரியத்தடைகள் நீங்கும், தீராத நோயுற்றவர்கள் நோயிலிருந்து மீள்வர்.

புரட்டாசி :- சர்க்கரைப் பொங்கல், புளியோதரை நிவேதித்து தானம் செய்தல் வேண்டும். விஷக்கடி முதலியன நீங்கும்.

ஐப்பசி :- உளுந்து வடை நிவேதித்து தானம் செய்தல் வேண்டும். சீதள நோய் தீரும்.

கார்த்திகை :- எருமிச்சை சாதம், தேங்காய்சாதம் நிவேதித்து தானம் செய்தல் வேண்டும்.

இதனால் பெண்களுக்கு கர்ப்ப சம்பந்தமான நோய்கள் தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழி :- வெண் பொங்கலுடன் கடலை நிவேதித்து தானம் செய்தல் வேண்டும். இதனால் மஞ்சட்காமாலை, ஆஸ்துமா போன்றவைநீங்கும்.

தை :- தயிர், தேன் நிவேதித்து தானம் செய்தல் வேண்டும். கபத்தால் வரும் நோய்கள் தீரும்.

மாசி :- நெய்யுடன் கூடிய சர்க்கரைப் பொங்கல் நிவேதித்து தானம் செய்தல் வேண்டும்.சிறுநீரகக் கோளாளாறு, மந்தம் முதலியன தீரும்.

பங்குனி :- தேங்காச்சாதம், தக்காழிச்சாதம் நிவேதித்து தானம் செய்தல் வேண்டும். மனக்கிலேசம், பித்தம், பைத்தியம் முதலியன தீரும்.

## லிங்காஷ்டகம்

ப்ரம்ம முராரி ஸு"ரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஸித ஸோபித லிங்கம்
ஜன்மஜ து:.க விநாஸக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவமுனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காமதஹம் கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாஸன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வ ஸு"கந்தி ஸு"லேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்தஸு"ராஸு"ர வந்தித லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

கனகமஹாமணி பூஜித லிங்கம்
பணிபதி வேஷ்டித ஸோபித லிங்கம்
தசஷ்ஸு"யக்ஞ விநாஸன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸு"ஸோபித லிங்கம்
ஸஞ்சிதபாப விநாஸன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவைர்ப் பக்தி பிரவேச லிங்கம்
தினகரகோடி ப்ரபாகர லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டதளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாஸக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

லிங்காஷ்டகமிதம் புண்யம் ஜத் படேச்சிவ ஸந்நிதோ
ஸிவலோகம வாப்ரோதி ஸிவேன ஸஹமோததே.

**லிங்காஷ்டகம் தமிழ் வடிவம்**

1. அயன் அரி தேவர் அர்ச்சிக்கும் லிங்கம்
தூய ஒளிச்சுடர் துலங்கிடும் லிங்கம்
பிறவித் துயரை அழித்திடும் லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்

2. தேவரும் முனிவரும் சேவிக்கும் லிங்கம்
காமனை எரித்துக் கருணைசெய் லிங்கம்
இராவணன் செருக்கை அழித்திட்ட லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்

3. கமகம நறுமணம் கமழ்ந்திடும் லிங்கம்
புத்தியை வளர்த்திடும் பூரண லிங்கம்
சித்தர் சுராசுரர் சேவிக்கும் லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்

4. பொன்மணி மாலை பொலிந்திடும் லிங்கம்
அரவணி இலகிடும் அழகிய லிங்கம்
தக்கனின் வேள்வியைத் தகர்த்திட்ட லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்

5. குங்குமம் சந்தனம் குலவிடும் லிங்கம்
பங்கய மாலை பளிச்சிடும் லிங்கம்
சஞ்சித பாபத்தை நீக்கிடும் லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்

6. தேவகணங்கள் வணங்கிடும் லிங்கம்
பாவிக்கும் பக்தரைப் பாலிக்கும் லிங்கம்
கோடி சூர்யப்ர காசமாம் லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்

7. அஷ்ட தளத்தை அணிந்திடும் லிங்கம்
அனைத்தையும் ஆக்கிடும் அற்புத லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ட தரித்திரம் போக்கிடும் லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்

8. சற்குரு சுரவரர் தொழுதிடு லிங்கம்
சுரவன மலர் என்றும் தூவிடும் லிங்கம்
பராத் பரம்பர மாத்மக லிங்கம்
சரணம் வணக்கம் சதாசிவ லிங்கம்

9. லிங்காஷ்டகமிதை சிவசந்நிதியில்
இசைத்திடும் அன்பர்கள் இன்ப சுகத்தை
அடைவர் சிவசா யுச்சியம் பெறுவர்
சிவபோ கானந்தச் சிலிர்ப்புடன் வாழ்வர்.

## சிவ பஞ்சாட்சர தோத்திரம்

1. அராவினை அணியாய் கொண்ட
அரனெனும் மகேஸ்வ ரன்தான்
விபூதியை மேனி தாங்கி
விளங்குவோன் நித்தன் சுத்தன்
அபேதமும் பேதம் ஆன
அரியதிகம் பரனை யந்த
நகரமாய் உருக்கொள் வோனை
நலமுறத் துதிக்கின் றேனே

2. கங்கையிற் கலந்த சாந்தம்
களபமாய் பூசும் காந்தன்
நந்தியுள் ளிட்டோ ரான
நற்கணத் தலைவன் வேத
மந்தாரை மலரின் பூஜை
மல்கிடும் மகேச னான
மகாரமாய் உருக்கொள் வோனை
நலமுறத் துதிக்கின் றேனே

3. தக்கனின் யாகம் தன்னைத்
தகர்த்து தாட்சா யணியின்
மிக்கதோர் வதன காந்தி
அவிந்தவன் நீலகண்டன்
தொக்கமா விடைப்ப தாகைத்
தூயனை அரனை யந்தச்
சிகாரமாய் உருக்கொள் வோனைச்
சிவனை நான் துதிக்கின்றேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கௌதமர் வசிட்டர் மற்றும்
குறுமுனி ரிஷிகள் போலத்
தவத்தினில் சிறந்தோர் தேவர்
தாமுறை தொழுது வாழ்த்தும்
சந்திரசூரி யாக்கினி முக்
கண்ணனை சேக ரனையவ்
வகாரமாய் உருக்கொள் வோனை
வள்ளலைத் துதிக்கின்றேனே

5. யட்ச சொரூபம் கொண்டே
வேதசெஞ் சடையைக் கொண்ட
கட்கமாம் பினாக ஹஸ்தக்
கடவுளை அழிவற் றோனை
தொக்கமங் களங்கள் எல்லாம்
தொடர்திகம் பரனைத் துய்ய
யகாரமாய் உருக் கொள்வோனை
யாண்டுமே துதிக்கின்றேனே.

## நந்தீஸ்வரர் பாடல்கள்

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரிசு ஆயினும் ஏத்துமின்ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே.

நந்தியருளாலே நாத நாம் பேறுபெற்றோம்
நந்தியருளாலே மூலனை நாடி னோம்
நந்தியருளாவது என் செய்யும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நான் இருந்தேனே. —திருமூலர்.

நந்தியெம் பெருமான் தன்னை நாள் தோறும் வணங்குவோர்க்கு
பந்தியில்ஞானம் சேரும் பொலிவுறு செல்வம் கூடும்
சிந்தையில் அமைதி தோன்றும் சிறப்புறு மக்கள் சேர்வர்
இந்திரயோகம் கிட்டும் இணையில்லா வாழ்வுதானே. —தனிப்பாடல்

வந்திறை அடியிற்றாழ் வானவர் மகுட கோடி
பந்தியபன் மணிகள் சிந்தவேத்திரப் படையால் தாக்கி
அந்தியும் பகலும் தொண்டர் அவகிடும் குப்பையாக்கும்
நந்தியெம் பெருமான் பாதம் நகை மலர் முடிமேல் வைப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ கால சிறப்புத் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

## சம்பந்தர்

நாகந்தான் கயிறாக நளிர்வரை யதற்கு மத்தாகப்
பாகந்தேவ ரொழசுரர் படுகட லொழக் கடைய
வேகநஞ்செழ வாங்க வெருவொடுமி ரிந்தெங்குமோட
ஆகந்தனில் வைத்தமிர்த மாக்குவித்தான் மறைக்காடே

## திருநாவுக்கரசர்

பருவரை ஒன்று சுற்றி அரவங் கைவிட்ட
இமையோ ரிரிந்து பயமாய்த்
திருநெடு மால்நிறைத்தை அடுவான் விசும்பு
சுடுவான் னெழுந்து விசைபோய்ப்
பெருகிட மற்றிதற்கோர் பிதிகார மொன்றை
அருளாய் பிரானே எனலும்
அருள்கொடு மாவிடத்தை எரியாமல் உண்ட
அவனண்ட ரண்டர் அரசே

## சுந்தரர்

கோல்வரை மத்தென நாட்டிக்
கோளரவு சுற்றிக் கடைந்தெழுந்த
ஆல நஞ்சு கண்டவர் மிகவிரிய
அமரர்கட்கருள் புரிவது கருதி
நீலமார் கடல் விடந் தனையுண்டு
கண்டத்தே வைத்த பித்த நீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப்புன் கூருளானே.

## மாணிக்கவாசகர்

கோலால மாகிக் குரைகடல்வாய் பின்றெழுந்த
ஆலால முண்ட னவன்சதுர்தா னென்னேடி
ஆலால முண்டிவனேல் அயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ.

## காரைக்காலம்மையார்

இனியோநா முய்ந்தோம் இறைவன்தாள் சேர்ந்தோம்
இனியோ ரிடரிலலோம் நெஞ்சே -- இனியோர்
வினைக்கடலை யாக்குவிக்கு மீளாய் பிறவிக்
கனைக் கடலை நீந்தினோம் காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேக்கிழார்

அடியவாரம் இமையவர்தம் கூட்ட முய்ய
அலைகடல்வாய் நஞ்சுண்ட அமுதே செங்கண்
நெடியானும் நான்முகனும் காணாக் கோல
நீலவிட அரவணிந்த நிமலா வெந்து
பொடியான காமனுயிர் இரதி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே பொங்கர் வாசக்
கடியாரும் மலர்ச்சோலை மருங்கு சூழும்
கவின்மருகற் பெருமானே காவாய் என்றும்.

திருச்சிற்றம்பலம்

# பிரதோஷ அபிஷேக காலத்தில் மற்றும் பூஜை நேரத்தில் ஓதக்கூடிய சில தேவாரப் பாடல்கள்

### உயிருக்கு உறுதி அளிக்க சம்பந்தர் அருளியது

பண் --காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடிவாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே.

பண் -- கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

காதல் ஆகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

### திருநீலகண்டத் திருப்பதிகம்

பண் -- வியாழக்குறிஞ்சி

திருச் சிற்றம்பலம்

அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃது அறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனம் அன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றும் நாம் அடியோம்
செய்வினை வந்துஎமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன நிம்மதி அடைய அப்பர்சுவாமிகள் அருளியது

பண் -- காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக்கை தொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே.

## துன்பம் அகல சுந்தரர் அருளியது

பண் -- பழம் பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

மற்றுப்பற்றெனக் கின்றிநின் திருப்பாதமே
மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத
தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க்கரையூரிற்
பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான் மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே.

திருச்சிற்றம்பலம்

## அரனையருச்சித்த அரும்பலன் பெற அப்பர்சுவாமிகள் அருளிய திருவாரூர் திருத்தாண்டகம்.

பண் -- குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1. கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
கழல் அடைந்தார் செல்லும் கதியே போற்றி
அற்றவர்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி
அல்லல் அறுத்து அடியேனை ஆண்டாய் போற்றி
மற்றுஒருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரம்எரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி.

2. வங்கமலி கடல்நஞ்சம் உண்டாய் போற்றி
மதயானை ஈருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கு அலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித் தோல்ஆடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி
ஆலமர நீழல்அறம் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்நெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் உடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவேல் ஏந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற்றி
சிலையால் அன்று எயில்எரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

4. பொன்இயலும் மேனியனே போற்றி போற்றி
பூதப் படைஉடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கும் ஆனாய் போற்றி
மறிஏந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க்கு உண்மையனே போற்றி போற்றி
உலகுக்கு ஒருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

5. நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்இறுத்த வேந்தே போற்றி
வெண்மதிஅம் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளில் ஆடல் உகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கு அணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

6. சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத்து அயனோடு மாலும் காணா
அனல்உருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

7. வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாள்அரவும் வைத்தாய் போற்றி
கொம்புஅனைய நுண்இடையாள் கூறா போற்றி
குரைகழலால் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்பும் அவர்க்கு அரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறுஅங்கம் ஆனாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. உள்ளமாய் உள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்துளென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி
வெள்ளைஏறு ஏறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மோலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

9. பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்கும் தேவா போற்றி
திருமாலுக்கு ஆழி அளித்தாய் போற்றி
சாவாமே காத்துஎன்னை ஆண்டாய் போற்றி
சங்குஒத்த நீற்றுஎம் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

10. பிரமன்தன் சிரம்அரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோடு ஆணுருவாய் நின்றாய் போற்றி
கரம்நான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க்கு ஆற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க்கு அரசே போற்றி
அன்று அரக்கன் ஐநான்கு தோளும் தாளும்
சிரம்நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

**அம்பிகையை அர்ச்சித்த அரும்பலன் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருக்கயிலாய திருத்தாண்டகம்.**

1. வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆள் என்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

2. பிச்சாடல் பேயோடு உகந்தாய் போற்றி
பிறவி அறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவி யென்சிந்தை புகுந்தாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்ச்சார் புரமூன்றும் எய்தாய் போற்றி
போகாது என்சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

3. மருவார் புரமூன்றும் எய்தாய் போற்றி
மருவி என் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி ஒளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம்பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

4. வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்து என்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
வேர்க்கும் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீயாடல் உகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

5. ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராது என்சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவியான நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

6. சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவர் அறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்ந்தாய் போற்றி
போகாது என் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

7. பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும் சொல் ஆனாய் போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணும் நிலனும் தீ ஆனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

8. இமையாது உயிராது இருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாக அணைத்தாய் போற்றி
ஊழி ஏழான ஒருவா போற்றி
அமையா வருநஞ்சைஆர்த்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

9. மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் தொழும் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல்நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

10. நெடிய விசும்பொடு- கண்ணே போற்றி
நீள அகலம் உடையாய் போற்றி
அடியும் முடியும் இகலிப் போற்றி
அங்கு ஒன்று அறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலாய் என் சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

11. உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி
ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணார் இசையின் சொல்கேட்டாய் போற்றி
பண்டெயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணாய் உலகிற்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ நாமாவளி

1) ஓம் சிவனே போற்றி.
2) ஓம் மகேசனே போற்றி.
3) ஓம் நன்மையை நயப்பாய் போற்றி.
4) ஓம் பிநாகமென்னும் வில்லேந்தியவனே போற்றி
5) ஓம் மதி சூடியவனே போற்றி.
6) ஓம் வாமதேவனே போற்றி.
7) ஓம் முக்கண்ணா போற்றி.
8) ஓம் சடயவனே போற்றி.
9) ஓம் நீலச் செம்மேனியனே போற்றி.
10) ஓம் சங்கரா போற்றி.
11) ஓம் சூலம் ஏந்தியவனே போற்றி.
12) ஓம் கட்வாங்கம் என்னும் ஆயுதத்தினை ஏந்தியவனே போற்றி.
13) ஓம் விஷ்னுவைத்தேவியாக் கொண்டவனே போற்றி.
14) ஓம் ஒளி சூளப் பெற்றவனே போற்றி.
15) ஓம் அம்பிகாநாதனே போற்றி.
16) ஓம் விஷமுண்ட கண்டா போற்றி.
17) ஓம் பக்தவத்சலா போற்றி.
18) ஓம் உலகின் பிறப்பிடமே போற்றி.
19) ஓம் ஸம்ஹார மூர்த்தியே போற்றி.
20) ஓம் மூவுலக நாயகனே போற்றி.
21) ஓம் கறுத்த கண்டம் படைத்தோனே போற்றி.
22) ஓம் சர்வமங்களா தேவியின் பிரியனே போற்றி.
23) ஓம் அச்சுறுத்தும் வடிவினனே போற்றி.
24) ஓம் தலையோட்டை ஏந்தி வருபவனே போற்றி.
25) ஓம் காமனைப் பகைப்பவனே போற்றி.
26) ஓம் அந்தகன் அசுரனை அழித்தாய் போற்றி.
27) ஓம் கங்கையைச் சடையில் தாங்கினாய் போற்றி.
28) ஓம் நெற்றிக் கண்ணா போற்றி.
29) ஓம் காலனை வெண்றாய் போற்றி.
30) ஓம் கருணைக் கடலே போற்றி.
31) ஓம் பயங்கர வடிவினனே போற்றி.
32) ஓம் கோடரியைக் கையில் ஏந்தியவனே போற்றி.
33) ஓம் மானைக் கையில் ஏந்தியவனே போற்றி.
34) ஓம் சடை தரித்தவனே போற்றி.
35) ஓம் கயிலை மலையில் வசிப்பவனே போற்றி.
36) ஓம் கவசம் அணிந்தோனே போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37) ஓம் அழுத்தமானவனே போற்றி.
38) ஓம் முப்புரமெரித்தவனே போற்றி.
39) ஓம் காளைமாட்டுக் கொடியோனே போற்றி.
40) ஓம் காளை மாட்டை வாகனமாக் கொண்டவனே போற்றி.
41) ஓம் திருநீறு பூசிய மேனியோனே போற்றி.
42) ஓம் சாமவேத கானத்தில் பிரியம் வைத்தவனே போற்றி.
43) ஓம் ஒளிமயமானவனே போற்றி.
44) ஓம் மும்மூர்த்தி வடிவினனே போற்றி.
45) ஓம் தனக்கு மேலான தெய்வமில்லாதவனே போற்றி.
46) ஓம் எல்லாம் அறிந்தவனே போற்றி.
47) ஓம் பரமாத்ம வடிவினனே போற்றி.
48) ஓம் சூரிய சந்திர அக்கினியைக் கண்களாகக் கொண்டவனே போற்றி.
49) ஓம் யாகத்தில் தேவர்களுக்கு ஹோமம் செய்யும் அன்ன வடிவினனே போற்றி
50) ஓம் யாகமே உருக் கொண்டவனே போற்றி
51) ஓம் உமாதேவியுடன் கூடியவனே போற்றி
52) ஓம் ஐந்து முகம் படைத்தவனே போற்றி
53) ஓம் சதாசிவனே போற்றி
54) ஓம் உலக நாயகனே போற்றி
55)- ஓம் வீரபத்திர வடிவில் தோன்றியவனே போற்றி
56) ஓம் தேவகணங்களின் நாயகனே போற்றி
57) ஓம் உயிர்களின் பதியே போற்றி
58) ஓம் பொன்னை வீரியமாயுடையவனே போற்றி
59) ஓம் எவராலும் அடக்க முடியாதவனே போற்றி
60) ஓம் மலைக்கரசே போற்றி
61) ஓம் மலையில் உறைபவனே போற்றி
62) ஓம் பாவமணுகாதவனே போற்றி
63) ஓம் பாம்பை அணிகலனாய்க் கொண்டவனே போற்றி
64) ஓம் ஒளி வடிவானவனே போற்றி
65) ஓம் மேருமலையை வில்லாய்க் கொண்டவனே போற்றி
66) ஓம் மலையைநேசிப்பவனே போற்றி
67) ஓம் புலித்தோலை ஆடையாய்க் கொண்டவனே போறறி
68) ஓம் முப்புரத்தின் பகைவனே போற்றி
69) ஓம் பகவானே போற்றி
70) ஓம் பிரதமகணங்களின் அதிபனே போற்றி
71) ஓம் யமனை வென்றவனே போற்றி
72) ஓம் சூட்சும சரீரம் படைத்தவனே போற்றி
73) ஓம் உலகு முழுவதும் வியாபித்தவனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74) ஓம் உலக குருவே போற்றி
75) ஓம் ஆகாயத்தில் பறக்கும் தலைமயிரை உடையவனே போற்றி
76) ஓம் முருகனின் தந்தையே போற்றி
77) ஓம் அழகிய நடையாய் போற்றி
78) ஓம் ருத்திரனே போற்றி
79) ஓம் பூதகணங்களின் பதியே போற்றி
80) ஓம் அடிமரம் போன்றவனே போற்றி
81) ஓம் பாம்பாட்டியே போற்றி
82) ஓம் திசைகளை ஆடையாயுடையவனே போற்றி
83) ஓம் எட்டு மூர்த்தி வடிவினனே போற்ற்றி
84) ஓம் பற்பலவடிவம் கொண்டவனே போற்றி
85) ஓம் சாத்துவிகனே போற்றி
86) ஓம் பரிசுத்த வடிவினனே போற்றி
87) ஓம் என்றுமுள்ளவனே போற்றி
88) ஓம் பிளக்கும் கோடரியேந்தியவனே போற்றி
89) ஓம் பிறப்பற்றவனே போற்றி
90) ஓம் தளைகளிலிருந்து விடுவிப்பவனே போற்றி
91) ஓம் இன்புறச் செய்பவனே போற்றி
92) ஓம் உயிர்களின் பதியே போற்றி
93) ஓம் தேவனே போற்றி
94) ஓம் மஹாதேவனே போற்றி
95) ஓம் அழிவற்றவனே போற்றி
96) ஓம் ஹரியே போற்றி
97) ஓம் பகனுடைய கண்ணைப் பறித்தவனே போற்றி
98) ஓம் வெளித் தோற்றவனே போற்றி
99) ஓம் தக்ஷ்னின் யாகத்தை அழித்தவனே போற்றி
100) ஓம் ஹரனே போற்றி
101) ஓம் பூஷனுடைய பல்லை உடைத்தவனே போற்றி
102) ஓம் திடச் சித்தனே போற்றி
103) ஓம் ஆயிரம் கண் படைத்தவனே போற்றி
104) ஓம் ஆயிரம் கால் படைத்தவனே போற்றி
105) ஓம் முக்தியளிப்பவனே போற்றி
106) ஓம் முடிவற்றவனே போற்றி
107) ஓம் பிறவிக்கடலைக் கடத்துவிப்பவனே போற்றி
108) ஓம் பரமேஸ்வரனே போற்றி.

**ஓம் சிவகாமி உடனுறை சிவசிதம்பரேஸ்வரரே போற்றி போற்றி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானரத்தினத்தின் வெளியீடுகள்

01. அர்த்தம் உள்ள விவாகம்

02. சூரிய ஆராதனை

03. நலம் தரும் சனீஸ்வரன்

04. விரத மஞ்சரி

05. வாழ்வியல் கிரியைகள்

06. ஆலயம் தொழுவதும் சாலவும் நன்று

07. நீதோக்ஷ விரதம்

08. தனுவோடைப்பதி சிவ கீதங்களும் கேதார கௌரி விரத பாடலும் - ஒலிப்பேழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரலையா ஓவ்(f)செற் பிறின்ரேஸ்,
காசிப்பிள்ளை கட்டிடம்,
சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org